# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2009 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஏப்பிறல் மாதம் 08 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 10.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 8 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட். 18/2005)

### ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

முன்னுரை.

"ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவகம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான நிறுவகம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் பண்டாரகம, கிந்தெல்பிட்டிய, சிறீபுண்யவர்தனராம யில் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட நிறுவகம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள் ளதாதலாலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவகத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அழைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தானபம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஜகத்தலா சமூக நலன்புரி நிறுவகம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு

கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது, அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரம் கொண்டாதாயிருத்தலும் வேண் டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் அநாதை, அநாதரவாக்கப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட சிறுவர் களுக்கான இல்லங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஆ) இல்லங்களிலுள்ள அநாதைச் சிறுவர்களுக்கு சௌகரி யமான வாழ்க்கைத் தரங்களை ஏற்பாடு செய்வதனை யும், பேணுதலையும் உறுதிப்படுத்துதல் ;

(இ) இல்லங்களிலுள்ள சிறுவர்களின் தொடர்ச்சியான கல்வி மேம்பாட்டுக்கும் சிறுவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்துவதற்கும் தேவையான வசதிகளை வழங்குதல்;

(ஈ) இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கு வாழ்க்கைத் தொழில் ஆலோசனைகளையும், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி வசதிகளையும் வழங்குதல் ; அத்துடன்

(உ) இல்லங்களில் வசித்த பின்னர் அவற்றைவிட்டு வெளி யேறிய சிறுவர்களின் வருங்கால நலனைக் கண்காணித் தலும் அவசியமானவிடத்து அதில் துணை புரிதலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தி னதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகைய னவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும்,

காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும், பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் ஆகியவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தலைவர், உபதலைவர், பிரதம செயலாளர், பிரதிச் செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட (இதனகத்துப் பின்னர் “குழு” எனக் குறிப்பீடு செய்யப் படும்) முகாமைக் குழு ஒன்றினால் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் இணங்க நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள எது எப்படியிருப்பினும் கிந்தெல்பிட்டிய சிறீ புண்யவர்தனாராமய விகாரையின் முதலாவது பிரதான மதகுருவான சங்கைக்குரிய கௌரவ கிந்தெல்பிட்டிய ஆரிய மைத்திரிதேரர் கூட்டுத்தாபனத்தின் முதலாவது தலைவராதல் வேண்டுமென்பதுடன் அவருக்குப் பின் அடுத்துறும் ஒவ்வொரு பிரதான மதகுருவும் பதவி வழி தலைவராதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக் குழுவானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் முகாமைக்குழுவின் உறுப்பினர்களாகப் பதவி தாங்கியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர் களைச் சேர்த்துக்கொள்ளுதலும் அவர்களை விலக்குத லும் அல்லது அவர்கள் பதவி விலகுதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவி தாங்கு நர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவி யிலிருந்து அகற்றப்படுதலும் அலுவலக நியதிகளும் அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும்;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும், முகாமைக்குழு உறுப்பினர்களின் ஒழுக்கமும், கடமை களும் பதவிக்காலமும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர் கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், ஒழுக்கமும், கடமைகளும், பணிகளும் ;

(உ) முகாமைக் குழுச் சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங் களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும், அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் அதன் நிதியங்களின் கட்டுக் காப்பும், அதன் கணக்குகளைப் பேணுதலும், கணக் காய்வு செய்தலும் அத்துடன் ;

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்று ஆக்கப்படும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, அன்பளிப்பு, நன்கொடை, உதவுதொகை அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைக் குழு தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் புனரமைப்பதற்காகவும், சீர்திருத்துவதற்காகவும் அல்லது அபிவிருத்தி செய்வதற்காகவும் பெறுமானத் தேய்வு அல்லது கடனாழ் நிதியமொன்றைக் கூட்டுத்தாபனம் உருவாக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிறுவனத்தால் செலுத்தப்படவுள்ளனவும், நிறுவனத்திற்குச் செலுத்தப்படவுள்ளவுமான கடன்கள்.

**8**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்திற்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிறுவனத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**9**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனம் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகவும், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கணக்காய்வும், கணக்குகளும்.*

**11**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,-

(i) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

***12***. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளைப் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

***13***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்